தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்

க.எண்.1/பண்டகம்/க.மா.ஆ.நி./சத்தி/2023

ஏல பொறுப்பு அலுவலர்,
பேராசிரியர் மற்றும் தலைவர்,
காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம்,
உப்புப்பள்ளம், பகுத்தம்பாளையம்,
சத்தியமங்கலம் - 638 451,
ஈரோடு மாவட்டம்.

நாள்: 17.04.2023

## கால்நடை ஏல விளம்பரம்

காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையத்தில் கீழ்கண்ட இருபத்தி ஆறு எண்ணிக்கையிலான கிடாரிகள், காளைமாடுகள், கிடாரி மற்றும் காளை கன்றுகள் மூடிய உறைகளில் பெறப்படும் விலைப்புள்ளிகள் மற்றும் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது.

| வ.எண் | கால்நடை யின் எண் | இனம் | வயது (வருடம்- மாதம் நாள்) | பிறந்த தேதி | உடல் எடை (கிலோ | மற்ற விவரங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1. | KCM 3 | காங்கேயம் | 4வ 9மா 17நாள் | 28.05.2018 | 443 | அதிகப்படியான காளை |
| 2. | KCM 5 | காங்கேயம் | 4வ 7மா 23நாள் | 22.07.2018 | 397 | அதிகப்படியான காளை |
| 3. | KCM 6 | காங்கேயம் | 4வ 8மா 20நாள் | 25.06.2018 | 407 | அதிகப்படியான காளை |
| 4. | KCM 8 | காங்கேயம் | 4வ 4மாதம் | 15.11.2018 | 346 | அதிகப்படியான காளை |
| 5. | KCM 9 | காங்கேயம் | 4வ 5மா 8நாள் | 07.10.2018 | 413 | அதிகப்படியான காளை |
| 6. | KCM 10 | காங்கேயம் | 4வ 7மாதம் | 15.08.2018 | 412 | அதிகப்படியான காளை |
| 7. | KCM 2111 | காங்கேயம் | 2வ 2மா 9நாள் | 06.01.2021 | 164 | இடது முன்னங்கால் எலும்பு முறிவான காளை |
| 8. | KCM 2126 | காங்கேயம் | 1வ 7மா 4நாள் | 11.08.2021 | 92 | அதிகப்படியான காளை |
| 9. | KCM 2127 | காங்கேயம் | 1வ 6மா 28நாள் | 17.08.2021 | 112 | அதிகப்படியான காளை |
| 10. | KCM 2128 | காங்கேயம் | 1வ 5மா 1நாள் | 14.10.2021 | 124 | வளர்ச்சி குன்றிய காளை |
| 11. | KCM 2129 | காங்கேயம் | 1வ 4மா 12நாள் | 03.11.2021 | 92 | அதிகப்படியான காளை |
| 12. | KCM 2234 | காங்கேயம் | 1வ 2மா 12நாள் | 03.01.2022 | 98 | அதிகப்படியான காளை |
| 13. | KCM 2235 | காங்கேயம் | 1வ 2மா 9நாள் | 06.01.2022 | 88 | அதிகப்படியான காளை |
| 14. | KCM 2236 | காங்கேயம் | 1வ 2மா 6நாள் | 09.01.2022 | 108 | அதிகப்படியான காளை |
| 15. | KCM 2238 | காங்கேயம் | 1வ 4நாள் | 11.03.2022 | 66 | அதிகப்படியான காளை |
| 16. | KCM 2243 | காங்கேயம் | 10மா 27நாள் | 18.04.2022 | 69 | அதிகப்படியான காளை கன்று |
| 17. | KCM 2244 | காங்கேயம் | 10மா 19நாள் | 26.04.2022 | 60 | அதிகப்படியான காளை கன்று |
| 18. | KCM 2249 | காங்கேயம் | 8மா 8நாள் | 07.07.2022 | 67 | வளர்ச்சி குன்றிய காளை கன்று |
| 19. | KCM 2251 | காங்கேயம் | 8மா 1நாள் | 14.07.2022 | 47 | அதிகப்படியான காளை கன்று |
| 20. | KCM 2252 | காங்கேயம் | 8மாதம் | 15.07.2022 | 44 | அதிகப்படியான காளை கன்று |
| 21. | KCM 2253 | காங்கேயம் | 7மா 3நாள் | 12.08.2022 | 56 | அதிகப்படியான காளை கன்று |
| 22. | KCM 2254 | காங்கேயம் | 5மா 24நாள் | 21.09.2022 | 39 | வளர்ச்சி குன்றிய காளை கன்று |
| 23. | KCF 2133 | காங்கேயம் | 1வ 2மா | 23.12.2021 | 76 | வளர்ச்சி குன்றிய கிடாரி |
| 24. | KCF 2240 | காங்கேயம் | 11மா 19நாள் | 26.03.2022 | 70 | வளர்ச்சி குன்றிய கிடாரி கன்று |
| 25. | KCF 9 | காங்கேயம் | 5வ 2மா | 15.01.2018 | 314 | மிகக்குறைவான இனப்பெருக்கத்திறன் கிடாரி மற்றும் ஒரு பக்க கருக்குழாய் அடைக்கப்பட்டுள்ளது |
| 26. | KCF 10 | காங்கேயம் | 5வ 2மா | 16.01.2018 | 324 | மிகக்குறைவான இனப்பெருக்கத்திறன் கிடாரி மற்றும் ஒரு பக்க கருக்குழாய் அடைக்கப்பட்டுள்ளது |

கிடாரிகள், காளைமாடுகள், கிடாரி மற்றும் காளை கன்றுகள் ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ள நபர்கள் தங்கள் விரும்பும் ஒவ்வொரு கால்நடைக்கும் தனித்தனியாக விண்ணப்ப படிவத்தினை ரூபாய் 12/- (பனிரெண்டு ரூபாய் மட்டும்) செலுத்தி காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலைய அலுவலகத்தில் 17.04.2023 (திங்கட்கிழமை) தேதி முதல் அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். (ரூபாய் பத்து- விண்ணப்ப படிவம் + ரூபாய் இரண்டு – சரக்கு மற்றும் சேவை

வரி). டெண்டர் படிவங்கள் பெற்றுக்கொள்ள இறுதி நாள் 17.05.2023 (புதன்கிழமை) அன்று மாலை 3.00 மணி வரை ஆகும். பூர்த்தி செய்யப்பட்ட டெண்டர் படிவங்களுடன் டெபாசிட் தொகையாக ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் **'The Professor and Head, Kangayam Cattle Research Station, Sathyamangalam'** என்ற பெயரில் எடுக்கப்பட்ட வங்கி வரைவோலை (Demand Draft) அல்லது இவ்வலுவலகத்தில் பணமாக செலுத்தி பெறப்பட்ட ஒப்புச்சீட்டை (Acknowledgement) பூர்த்தி செய்யப்பட்ட விலைப்புள்ளி படிவம் மற்றும் கையொப்பமிட்ட நிபந்தனை படிவம் ஆகியவற்றுடன் இணைத்து மூடி முத்திரையிட்டு 17.05.2023 (புதன்கிழமை) அன்று மாலை 4.00 மணிக்குள் காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், உப்புப்பள்ளம், பகுத்தம்பாளையம் வளாகத்தில் அமைந்துள்ள பேராசிரியர் மற்றும் தலைவர் அலுவலக அறையில் வைக்கப்பட்டுள்ள (கால்நடையின் எண் குறிப்பிட்ட) ஏலப்பெட்டியில் போடவேண்டும்.

பின்னர் 18.05.2023 (வியாழன்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் ஒவ்வொரு கால்நடைக்கும் பெறப்பட்ட விலைப்புள்ளி உறைகள் ஏல நடவடிக்கை பொறுப்பு அலுவலர்கள் முன்னிலையில் தனித்தனியாக திறக்கப்பட்டு விலைப்புள்ளி தொகைகள் பதிவு செய்யப்படும். அதன் பின்னர் அந்தந்த கால்நடைகளுக்குப் பெறப்பட்ட அதிக விலைப்புள்ளி தொகை அடிப்படை தொகையாக எடுத்துக் கொள்ளப்பட்டு பகிரங்க ஏலம் நடைபெறும்.

ஒரு குறிப்பிட்ட கால்நடைக்கு சரியான விலைப்புள்ளி சமர்பித்த நபர்கள் மட்டுமே அதற்குரிய ஏலத்தில் அனுமதிக்கப்படுவர். முத்திரையிடப்பட்ட விலைப்புள்ளி மற்றும் பகிரங்க ஏலம் ஆகியவற்றில் பெறப்பட்ட தொகைகள் ஒப்பிடப்பட்டு அதிக பட்சம் விலை கோரியவருக்கு ஏலம் உறுதி செய்யப்படும்.

எவ்வித முன்னறிவிப்புமின்றி ஏலத்தை தள்ளி வைக்கவோ அல்லது ரத்து செய்யவோ ஏல பொறுப்பு அலுவலருக்கு முழு உரிமை உண்டு.

குறிப்பு : மேற்கண்ட கால்நடைகள் அனைத்தும் ஜோனி கழிச்சல் நோய், காச நோய் மற்றும் கன்றுவீச்சு நோய் ஆகிய நோய் பாதிப்புகள் அற்றவை என உறுதி செய்யப்பட்டுள்ள கால்நடைகளாகும்.

<u>ஏல நடை முறை விவரங்கள்:</u>

| | |
|---|---|
| ✓ஒப்பந்த விலைப்புள்ளி படிவம் விநியோகம் துவங்கும் நாள் | : 17.04.2023 காலை 10.00 மணி |
| ✓ஒப்பந்த விலைப்புள்ளி படிவம் விநியோகம் முடிவுறும் நாள் | : 17.05.2023 மாலை 03.00 மணி |
| ✓ஒப்பந்த விலைப்புள்ளி படிவம் சமர்ப்பிக்க இறுதி நாள் | : 17.05.2023 மாலை 04.00 மணி |
| ✓விலைப்புள்ளி உறைகள் திறக்கப்படும் நாள் | : 18.05.2023 காலை 10.00 மணி முதல் |
| ✓ ஏலம் விடப்படும் நாள் | : 18.05.2023 காலை 10.00 மணி முதல் |
| ✓ ஏலம் விடப்படும் இடம் | : காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம், உப்புப்பள்ளம், பகுத்தம்பாளையம், சத்தியமங்கலம் - 638 451 |

மேற்கண்ட பொது ஏல நடவடிக்கைகள் கோவிட் 2019 பாதுகாப்பு வழிகாட்டு முறைச்சட்டங்களுக்கு உட்பட்டு நடைபெறும்.

(கையொப்பம்) 28/04/2023
ஏல பொறுப்பு அலுவலர்,
பேராசிரியர் மற்றும் தலைவர்,
காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையம்,
உப்புப்பள்ளம், பகுத்தம்பாளையம்,
சத்தியமங்கலம் - 638 451,
ஈரோடு மாவட்டம்.

**பெறுநர்**

ஏலதாரர்கள்

**நகல் :**

1. பதிவாளர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், பால் பண்ணை வளாகம், மாதவரம், சென்னை-51 - **தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.**
2. இயக்குநர், கால்நடை உற்பத்திக் கல்வி மையம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், பால் பண்ணை வளாகம், மாதவரம். சென்னை-51- **தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.**
3. நிதி அலுவலர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், பால் பண்ணை வளாகம், மாதவரம், சென்னை-51 - **தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.**
4. அறிவிப்பு பலகை - கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் கல்லூரிகள், ஆராய்ச்சி பண்ணைகள், கால்நடை மருத்துவ பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள், உழவர் பயிற்சி மையங்கள் மற்றும் வேளாண் அறிவியல் மையங்கள்.
5. அறிவிப்பு பலகை, காங்கேயம் மாட்டின ஆராய்ச்சி நிலையத்தின் அலுவலகம், உப்புப்பள்ளம், பகுத்தம்பாளையம், சத்தியமங்கலம் - 638 451,ஈரோடு மாவட்டம்.
6. தலைவர், ஊராட்சி மன்ற அலுவலகம்,கொத்தமங்கலம்
7. தலைவர், நகராட்சி அலுவலகம், சத்தியமங்கலம்
8. வட்டாட்சியர்,வட்டாட்சியர் அலுவலகம், சத்தியமங்கலம்